முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 25.11.2025, அ.வ.எண். 81/2014, வா.சா .1. காளித்தாய், க/பெ. துரைசாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5 , 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனக்கு என்ன வயது ஆகிறது என்றால் 70 வயது ஆகிறது. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பெண் குழந்தைகள். பெரிய குழந்தைக்கு என்ன வயது என்றால் 40 வயது ஆகும். நான் பிறந்து வளர்ந்தது எந்த ஊர் என்றால் சொக்கனூர் ஆகும். தற்போது நான் குடியிருப்பது எங்கு என்றால் பல்லடம் தாலுகா அனுப்பட்டி ஆகும். எனது கணவர் எந்த ஊர் என்றால் சட்டக்கல்புதூர் ஆகும். நான் திருமணம் ஆனது முதல் அனுப்பட்டியில் தான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். அனுப்பட்டிக்கும், சொக்கனூருக்கும் 70 கி.மீ தூரம் என்றால் எனக்கு எழுதப்படிக்கத் தெரியாததால் தூரம் தெரியாது.

2) நான் எனது வழக்குரையிலும், பிரமாண பத்திரிக்கையிலும் சொக்கனூரிலிருந்து வெகு தொலைவில் குடியிருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்., நான் காதல் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். எனது குடும்பத்தில் யாருக்கும் நான் காதல் திருமணம் செய்து கொண்டதில் விருப்பம் இல்லை என்றால் சரிதான். அதனால் எனது தகப்பனார் குடும்பத்திற்கும் எனது குடும்பத்திற்கும் எவ்வித போக்குவரத்தும் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் குடும்பத்தில் இருந்த மற்ற சகோதர சகோதரிகளின் குழந்தைகள் திருமணம் நடந்தது எனக்கு தெரியாது என்றும் அதில் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

3) நான் எனது நிரூபண வாக்குமூலத்திலும், எனது வழக்குரையிலும் என்ன கூறியுள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா 1 வது அயிட்ட சொத்து எனது தகப்பனார் விலைக்கு வாங்கிய வகையில் சொந்தம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 1 வது அயிட்ட சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பே எனது தகப்பனாருக்கு முன் பாத்தியஸ்தர்கள் சொத்து இருந்தது என்றால் சரிதான். 1 வது

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

அயிட்ட சொத்திற்கும் மற்ற சொத்துகளுக்கும் ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் ஆவணம் இல்லாமல் எப்படி ஓட்ட முடியும். 1 வது அயிட்டசொத்தை தவிர்த்து மற்ற சொத்துகளுக்கு ஆவணங்கள் நான் தாக்கல் செய்துள்ளேனாஎன்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) எனது தகப்பனார் அவர் சொத்துக்களை பொறுத்து எந்த வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்பதை எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் எனக்கு தெரிந்தவகையில் கூறுகிறேன். நான் அனுப்பட்டியில் இருப்பதால் சொக்கனூரில் என்ன நடக்கிறது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் எனக்கு திருமணம் நடந்ததற்கு பின்னிட்டு நான் சொக்கனூருக்கு சென்றதில்லை என்றால் எனது தகப்பனார் இறக்கும் வரை நான் சென்று கொண்டிருந்தேன். அதன் பின்னிட்டு நான் செல்லவில்லை,.

5) நான் சொக்கனூருக்கே செல்லாத நிலையில் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் நான் விளைச்சலில் பங்கு கேட்டும் அவர்கள் ஒரு பைசா கூட தரவில்லை. 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் நான் பாகம் கேட்டேனா என்றால் கேட்டேன். நேரில் சென்று தான் பாகம் கேட்டேன். வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. நான் நேரில் சென்று பாகம் கேட்டதாக கூறுவது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. வா சா ஆ 6 பேப்பரில் விளம்பரம் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி விளம்பரம் 2 ம் பிரதிவாதி பெயரில் மட்டும் தான் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அதற்கு மறுப்பு அறிவிப்பு 2 ம் பிரதிவாதி கொடுத்தார் என்றால் இல்லை.

6) அவ்வாறு நான் சொல்வது பொய் என்றும் 2 ம் பிரதிவாதி மறுப்பு அறிவிப்பு கொடுத்தார் என்றும் அதில் 1989 ம்ஆண்டிற்கு முன்பே தாவா சொத்துக்கள் பாகம்

ஒப்பம்/– (R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

செய்யப்பட்டுவிட்டது என்றும் அதில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று தெரிவித்திருந்ததால் தான் நான் மறுப்பு அறிவிப்பு கொடுக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பத்திர பதிவு அலுவலகத்தில் தாவா சொத்தை பொறுத்து வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. 18.05.1983 ம் தேதியிலேயே எனது தகப்பனார், தாயார், சகோதரர்கள் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல.

7) மேற்படி பாகம் செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக எனது தகப்பனார் எந்த ஏற்பாடும் தாவா சொத்தை பொறுத்து செய்யவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பாகம் ஏற்பட்டதற்கு பின்பு 1 ம் பிரதிவாதி அவருக்கு பாகத்தில் வந்த சொத்துக்களை பொறுத்து அவரும் அவரது மக்கள் காளிமுத்து, சின்னசாமி ஆகியோருடன் 09.07.1990 ல் பாகம் செய்துகொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாகத்தை பற்றி தெரியும் என்றும் தெரிந்துகொண்டே வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வாதம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியாமலேயே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தாவா 1 வது அயிட்ட சொத்தை தவிர்த்து மற்ற சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்திலும் என்ன சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளன என்று தெரியாமலேயே நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு படிக்கத் தெரியாது வழக்கறிஞர் சொல்லி தெரிந்து கொண்டேன். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அவ்வாறு படித்து காண்பித்திருந்தால் நான் எனது நிரூபண வாக்குமூலத்திற்கு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கமாட்டேன் என்றால் சரியல்ல.

9) நான் திருமணம் செய்து கொண்டு சென்ற போது எனக்கும் இந்த குடும்பத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கடிதம் எழுதிக்கொடுத்துவிட்டு

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

சென்றேன் என்றால் சரியல்ல. நான் காதல்திருமணம் செய்து கொண்ட நாள் முதல் நாளது தேதிவரை பிரதிவாதிகள் குடும்பத்தோடு எனக்கு எவ்வித சம்மந்தமும், தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் பிரதிவாதிகளுடன் 18.05.1983 ம் தேதியிலேயே தாவா சொத்துக்களை பொறுத்து பாகம் செய்துகொண்டதால் தாவா சொத்தில் நான் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

10) ஆறுச்சாமி கவுண்டர் பாகம் செய்து கொண்டது பற்றி கூறியதற்கு பின்னிட்டு கூட நான் பத்திர அலுவலகம் சென்று வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை என்றால் சரிதான்.நான் தாக்கல் செய்துள்ள தாவா பொய்யானது என்றும், சட்டப்படி செல்லாது என்பதாலும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.